# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108600

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2022** FIR No.: மு.த.அ. எண் **05/2022** Date: நாள் **01.07.2022**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7(a)**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **30.06.2022** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் சுமார் 11.30 மணிக்கு Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **01.07.2022** Time : நேரம் **07.30 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **01.07.2022** Time : நேரம் **08.30 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **30 Kms North East**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வருவாய் ஆய்வாளர் அலுவலகம் குளத்தூர், தூத்துக்குடி மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **M.S.** முனியசாமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செல்லையாநாடார்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண்.1, தாசில்தார் தெரு, கீழ வைத்தியநாதபுரம், தத்தநேரி போஸ்ட், மதுரை-18.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு.செந்தில் முருகன், வருவாய் ஆய்வாளர், குளத்தூர், விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
**No**

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed C.Jayasree Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01/7/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 01.07.2022 at 09.30 hrs

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ..........

**<u>Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.05/2022</u>**

**<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>**

இன்று 01.07.2022-ம் தேதி காலை 07.30 மணிக்கு C.ஜெயஸ்ரீ, தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.M.S.முனியசாமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் விளாத்திகுளம் வட்டம், குளத்தூர் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.செந்தில்முருகன் என்பவர் புகார்தாரருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் 2004-ம் ஆண்டு அரசால் வழங்கப்பட்ட இலவச நிலங்களை விற்பனை செய்ய NOC பெற பரிந்துரை செய்வதற்கு ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்) லஞ்சமாக கேட்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட விளாத்திகுளம் வட்டம், குளத்தூர் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.செந்தில்முருகன் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை மூலமாக இயக்குநர் அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்தும் அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 05/2022 பிரிவு 7 (a) of PC Act, 1988 as Amended in 2018 படி 01.07.2022-ம் தேதி காலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் மு.செ.முனியசாமி, த.பெ.செல்லையா நாடார், எண்.1, தாசில்தார் தெரு, கீழ வைத்தியநாதபுரம், தத்தநேரி போஸ்ட், மதுரை-18. பெறுனர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. ஐயா, நான் மேலேகண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், மேட்டுப்பனையூர் கிராமம், ஆகும். கடந்த 2004 ஆம் ஆண்டு விளாத்திகுளம் தாசில்தார் அவர்களால் எனது பெயரில் குளத்தூர் (கிழக்கு) கிராமம் சர்வே எண் 125/2-ல் 1.44 ஏக்கர் நிலத்தையும், சர்வே எண். 125/4-ல் 1.38 ஏக்கர் நிலத்தையும், சர்வே எண்.125/3-ல் 1.40 ஏக்கர்

நிலத்தையும், சர்வே எண்.126/3-ல் 1.33 ஏக்கர் நிலத்தையும் எனது மனைவி அருள்மேரி பெயரிலும், சர்வே எண் 125/1-ல் 1.46 ஏக்கர் நிலத்தையும், சர்வே எண்126/2-ல் 1.33 ஏக்கர் நிலத்தையும் எனது தாயார் முனியம்மாள் (லேட்) பெயரிலும், சர்வே எண் 126/1-ல் 1.28 ஏக்கர் நிலத்தையும் எனது மாமியார் தங்கம்மாள் (லேட்) பெயரிலும், சர்வே எண் 126/4-ல் 1.33 ஏக்கர் நிலத்தையும் எனது மைத்துனர் ஜோசப் பெயரிலும், D.நமுனா மூலம் விவசாய பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது. மேற்படி நிலங்களுக்கு பட்டா எண்கள் முறையே 544, 536, 543, 549, 557 பெற்று தற்போது வரை தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன். தற்போது எனது குடும்ப சூழ்நிலை காரணமாக மேற்படி இடத்தை விற்பனை செய்ய உத்தேசித்து, மேற்படி இலவச நிலத்தை விற்பனை செய்வதற்கு எங்களுக்கு D.நமுனாவில் குறிப்பிடப்பட்டுள்ள 13-வது நிபந்தனையின்படி அரசு அனுமதி பெறப்பட வேண்டும். ஆகையால் மேற்படி நிலங்களை விற்பனை செய்வதற்கு அரசு அனுமதி பெறுவதற்காக கடந்த 6 மாதங்களுக்கு முன்பு வருவாய்த்துறையில் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு விளாத்திகுளம் வட்டாட்சியர் அவர்களிடமும் மனு கொடுத்திருந்தேன். அந்த மனுக்கள் சம்பந்தமாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு குளத்தூர் (கிழக்கு) கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டேன். அதற்கு அவர் நான் பரிந்துரை செய்து RI குளத்தூர் அவர்களுக்கு அனுப்பி விட்டேன். நீங்கள் RI அவர்களைப் போய் பாருங்கள் என்று சொல்லிவிட்டார். நான் இரண்டுமுறை RI-யை பார்க்க சென்றேன். ஆனால் அவரை பார்க்க இயலவில்லை. பின்பு நேற்று 30.06.2022-ம் தேதி காலை 11.30 மணியளவில் குளத்தூர் RI அலுவலகம் சென்று RI செந்தில் முருகன் அவர்களை நேரில் சந்தித்து எனது மனு பற்றி கேட்டேன். அதற்கு அவர் எதற்காக NOC பெற உள்ளீர்கள் என கேட்டார். நான் எனது மகள் கீர்த்தி சோபனாவின் திருமணத்திற்கு வாங்கிய கடனை அடைக்க வேண்டி இருப்பதால் நிலத்தை விற்பனை செய்ய உள்ளேன் என்று சொன்னேன். அதற்கு RI ஏக்கர் 1-க்கு ரூபாய் முப்பது ஆயிரம் வீதம் பணம் வேண்டும் என்றார். நான் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது ஏற்கனவே நான் கடனில் உள்ளேன் என்றேன். பின்பு அவர் 10.93 ஏக்கர் நிலத்திற்கு மொத்தம் மூன்று லட்சம் இன்று காலை 11.00 மணிக்கு மேல் வந்து கொடுத்தால் எனது மனுவை பரிந்துரை செய்வதாக கறாராக தெரிவித்தார். நானும் அவரிடம் வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு அலுவலகத்தை விட்டு வந்துவிட்டேன். வெளியே வந்து யோசித்து பார்த்ததில் அரசு வேலையை செய்வதற்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம்

இல்லை. எனவே என்னிடம் லஞ்சமாக கேட்ட பணத்தை எடுத்துகொண்டு புகார் மனுவுடன் வந்துள்ளேன். என்னிடம் அரசு வேலையை செய்வதற்கு லஞ்சமாக ரூபாய் மூன்று லட்சம் கேட்கும் குளத்தூர் RI செந்தில் முருகன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு நான் முழு ஒத்துழைப்பும் தருகிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by M.S.முனியசாமி, நாள் 01.07.2022. Respected Sir, இன்று 01.07.2022-ம் தேதி காலை 07.30 மணிக்கு இம்மனுவை பெற்று, மனுதாரர், எதிர்மனுதாரர் பற்றி இரகசிய விசாரணை செய்தும், கனம் இயக்குநரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னையில் அலைபேசியில் தகவல் தெரிவித்தும், அனுமதி பெற்றும் இம்மனுவின் தன்மைப்படி 01.07.2022-ம் தேதி காலை 08.30 மணிக்கு தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 05/2022 பிரிவு 7 (a) of PC Act, 1988 as Amended in 2018 படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். xxxxxx s/d., by C.ஜெயஸ்ரீ, காவல் ஆய்வாளர் 01.07.2022. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

01/07/2022

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thoothukudi District.